Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# Female Oppression in Family Life

**C. M. Flora**, Tamil Research Scholar, Nesamony Memorial Christian College, Marthandatm, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**Dr. E. Jasmin Viji**, Assistant Professor, Tamil Research Centre, Nesamony Memorial Christian College, Marthandatm, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu.India.
**ORCiD: https://orcid.org/0009-0001-7489-441X**
**DOI: 10.5281/zenodo.14752400**

## Abstract

*Female enslavement has been a form of cruelty against women since time immemorial in all societies. A man can get whatever he wants but when a woman is brought up she is brought up by saying that the woman has certain limits. Thus, a woman has to be under the control of her father before marriage and after marriage, she has to submit herself to her husband and after the death of him, she has to be under the safety of her son. She is subjected to many cruelties. She is forced to live as a slave throughout her life. Marriage is between a man and a woman. In fact, a woman is a sacred one to establish a family. A husband and wife relationship is very noble. But when a husband dominates his wife in the familial relationship, a turbulent situation occurs and affects his family and also the society. It will spoil the children of the family. Due to this, the woman suffers a lot mentally. Through this article, one can know how the woman is mentally affected by the domineering action of her husband.*

**Keywords:** Women, Happiness, Beauty, Growth, Life.

## References

[1] Isakiammal, B, Dr. *Pen Mana Sikkal*. Kavya Patippagam. Mutarpatippu, April, 2009.
[2] Kalaivani, N, Dr. *Tamil Putinankalil Tamil Odukkutalum Pirassanaikalum*. Kavya Patippagam, 2013.
[3] Goumareeswari, S. *Thirukkural Parimelazagar Urai*. Sharada Patippagam, 2002.
[4] Sukirtha Basmath, S. Dr. *Penkal Nettu Intu Nalai*. Sarash Patippakam, 2006.
[5] Parimala, S. *Makalirin Panmuka Nokku*. Tamil Palkalaikazhka Veliyedu, 2009.
[6] Prema, Ira. *Penniyam.* Tamil Puttakalayam Patippakam, Mutal Patippu, April 2000.
[7] Puliyoorkesigan. *Kuruntokai Mulamum Uraiyum*. Sarata Patippakam, 2010.
[8] Murukesan, M. Dr. *Marivarum Samutayattil Manitan*. Ganga Rani Patippagam, 2006.
[9] Johnsi Balraj, D. Dr. *Devatasi Murai Ozhippiyal*. Emikar Michael, 2024.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# குடும்ப வாழ்வில் பெண் ஒடுக்குதல்

**செ. ம. புளோரா**, பதிவு எண் 23213114022019, தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் எ . ஜாஸ்மின் விஜி**, உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம், நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0001-7489-441X
DOI: 10.5281/zenodo.14752400

**ஆய்வுச் சுருக்கம்**

*பெண் அடிமைப்படுத்தப்படுவது என்பது காலங்காலமாக பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமையாக தொடர்ந்து கொண்டே வருகின்றது. பெண் வளர்க்கப்படும் பொழுது ஆண் எப்படி வேண்டுமானாலும் இருப்பான் பெண்தான் அனுசரித்துப் போக வேண்டும் என்றெல்லாம் சொல்லி வளர்க்கப்படுகிறாள். இதனால் திருமணத்திற்கு முன் தன் தந்தைக்கும் திருமணத்திற்கு பின் கணவனுக்கும் கணவன் இறந்த பிறகு மகனுக்கும் அடிபணிந்து பல கொடுமைகளுக்கு ஆளாகிறாள். அவள் வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறாள். பெண் என்பவள் ஒரு குடும்பத்தை நிறுவுவதற்காக உள்ள புனிதமான இடமாகும்.கணவன் மனைவி உறவில் கணவன் தன் மனைவிடம் ஆதிக்கத்தை செலுத்தும் போது அவனுடைய குடும்பத்தை மட்டுமல்ல அந்த சமுதாயத்தை பாதிக்கக்கூடிய சூழல் ஏற்படுகிறது. இதனால் பெண் மனதளவில் பெருமளவு பாதிக்கப்படுகிறாள்.கணவனின் ஆதிக்க செயலினால் பெண் எவ்வாறு மனதளவில் பாதிப்புக்கு உள்ளாகிறாள் என்பதை இக்கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடியும்.*

**குறிப்புச்சொற்கள்:** மகளிர், மகிழ்ச்சி, அழகு, வளர்ச்சி, வாழ்க்கை.

**முன்னுரை**

குடும்ப உறவுகளில் முதன்மையானது கணவன் மனைவி உறவு. திருமணத்திற்குப் பின் ஒரு பெண்ணுக்கு பாசமிகு உறவு எதுவென்றால் அது கணவனின் உறவாகும். எனவே பெண் தனது கணவனைப் பற்றிய பல்வேறு கற்பனைகளுடனும், கனவுகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் தனது திருமண வாழ்வினை தொடங்குகிறாள். அவளது எதிர்பார்ப்புகள் திருமணத்திற்கு பின் ஏமாற்றம் அடையும்போது அவள் பல ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுகிறாள். பெற்றோரால் மிகவும் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டாலும் திருமணத்திற்குப் பின் கணவனின் சுய கட்டுப்பாட்டிற்கு அடங்கி பல பிரச்சினைகளை சந்திக்கிறாள். பெண் சுதந்திரமின்மை, தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமை, அடிமைத்தனம் போன்ற வாழ்க்கை வாழ கட்டாயப்படுத்தப்படுகிறாள். கணவனின்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஆணாதிக்க உணர்வும் அதிகாரப் போக்குகளும் மனைவியின் உணர்வுகளை பாதிக்கும் செயல்களாக அமையும் போது கணவனின் ஒவ்வொரு செயல்களும் மனைவியை ஏதோ ஒரு விதத்தில் ஒடுக்குதலுக்கு உள்ளாக்குவதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**கணவன் -மனைவி உறவு**

குடும்பத்தில் பெண் தாய், மகள், மனைவி, மருமகள், சகோதரி என்னும் நிலையில் அமைந்திருக்கும் உறவுகள் தான் அடிப்படையான உறவுகளாக அமைந்துள்ளது. இவ்வுறவுகளில் எல்லாம் முதன்மையான உறவாக திருமணத்திற்கு பின் ஒரு பெண்ணுக்கு அமைவது கணவன் மனைவி உறவாகும். திருமணத்திற்கு பின் பெண் மனைவி என்ற நிலையைப் பெறுகிறாள். இவ்வுறவு வாழ்வின் இறுதிவரை நீடித்து நிற்கக் கூடிய உறுதியான இணைப்பாகும். திருமணத்தின் வழி இணைந்து தான் என்ற தன்மை அழிந்து, நாம் என்ற நிலையை அடைவர். குறுந்தொகை பாடலில்,

**வினையே ஆடவர்க்கு உயிரே**
**மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிரே (குறுந்., 135: 1-2)**

என்று மனைவிக்கு தன் கணவன் தான் உயிர் போன்றவன் என்று எடுத்தியம்புகிறது.
திருக்குறளில் திருவள்ளுவரும் வாழ்க்கைத் துணைநலம், மனைமாட்சி அதிகாரத்தில் பெண்ணின் சிறப்பினை பெருமைப்பட மொழிந்துள்ளார். இதனை,

**தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலான் பெண் (குறள். 56)**

கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதி யமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவள் பெண்.மேலும்,

**இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல் ஆற்றின் நின்ற துணை (குறள். 41)**

வாழ்க்கை முறையான இல்லறத்துக்கு ஏற்றமும் நிறைவும் தருபவர் பெண்ணே. ஆணை மணந்து, மனங் கலந்து, வீடு நிறையும் மகிழ்வும் மாட்சியையும் உற்ற துணையாகவும் நிற்பவர் மகளிர்.இத்தகு சிறப்புமிக்க மனைவியை ஆணாதிக்க போக்கினால் பல ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவது தான் கேள்விக்குறியாக உள்ளது.கணவனின் அன்றாட செயல்களில் மாற்றம் ஏற்படும் போது அவள் ஒவ்வொரு நிலையிலும் உள்ளம் ஒடுக்கப்படுவதை பின்வரும் கருத்துக்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும் .

**கணவனின் அன்பின்மை**

திருமண உறவில் கணவனும் மனைவியும் அன்பு சங்கிலியால் பிணைக்கப்படும் பொழுது உறவு வலுப்பெறுகிறது. திருமணத்திற்கு பின் கணவனுடன் வாழும் பெண் மகிழ்ச்சியின் மொத்த உருவமாக காணப்படுகிறாள். துக்கத்தில் தோள் கொடுக்கவும், தப்பு செய்தால் அதனை சுட்டிக் காட்டி திருத்தவும், நன்மை செய்தால் அதை பாராட்டவும்,

மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளவும், வளர்ச்சியில் துணை நிற்கவும் பெண்ணுக்கு ஆண் ஊன்றுகோலாக இருக்க வேண்டும். கணவரின் அன்பு கிடைக்காத போது மனைவி தான் புறக்கணிக்கப்படுவதாக எண்ணுகிறாள். கணவன் மனைவியிடம் அன்பு கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் கணவனின் தீய எண்ணங்களும், செயல்களும் தான் மனைவி தனக்கு கட்டுப்பட்டவள் என்ற எண்ணம் அவன் மனதில் ஆழமாக பதிந்திருப்பதால், தன்னுடைய அனுமதி இல்லாமல் மனைவி எந்த இடத்துக்கு சென்றாலும் அதனை அவன் ஏற்றுக்கொள்ளாமல் காரணம் கேட்டு துன்பப்படுத்துகிறான்.இதற்கு காரணம் குடும்பம் என்ற அமைப்பும் திருமணம் என்னும் பந்தமுமாகும் என்று பெண் கருதுகிறாள்.பெண் விடுதலை என்பது திருமணம் முறையை அடியோடு அழித்தாலும் ஒழிக்க முடியாது (பிரேமா, இரா. ப: 85) பெண்ணியம் என்ற நூலில் சுட்டிக்காட்டுகிறார். எனவே திருமண உறவில் சிக்கல்கள் ஏற்பட்டாலும் அதிலிருந்து முயற்சி செய்து வெளியே வந்தாலும் சமுதாயத்தின் இழிவான வார்த்தைகளுக்கு ஆளாக்கப்பட்டுகிறாள் பெண்.

**தாழ்வு மனப்பான்மை**

கணவன் தன்னிடம் அழகின்மை, அறிவு கூர்மையின்மை, உடல் குறைபாடு போன்ற காரணங்களால் தன்னை தாழ்வுமனப்பான்மையோடு எண்ணிக் கொண்டு, மனைவியிடம் அவளது அறிவு, அழகு, திறமை, சிந்திக்கும் ஆற்றல் இவைகளைக் கண்டு அவளை மனதளவில் தனது இயலாமையை சுட்டிக்காட்டி பாதிப்புக் குள்ளாக்குகிறான். வார்த்தைகளாலும் செயல்களாலும் பல ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்குகிறான். பெண்ணுக்கு எத்தனை முறை மனதளவில் பாதிப்புகள் வந்தாலும் கணவன் ஒரு சில நேரங்களில் அன்பு காட்டும் போது கணவனால் ஏற்பட்ட மனக்காயங்களை ஒரு பொருட்டாகவே அவள் நினைப்பதில்லை. ஆனால் வாழ்க்கை ஏமாற்றமாக தோல்வியாக அமையும் பொழுது அவள் மனதளவில் பாதிப்புக்குள்ளாகி எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகி விடுகிறது.கணவனின் தாழ்வு மனப்பான்மையால் வாழ்வின் அடுத்த நிலைக்கு அடி எடுத்து வைக்க முடியாமல் தடுமாற்றம் அடைகிறாள்.கணவன் மனைவியை புரிந்து கொண்டால் மட்டுமே இதிலிருந்து வெளிவர முடியும்.

**கணவனின் ஆதிக்கம்**

அன்றிலிருந்து இன்று வரை பெண் என்பவள் தன் உடல் மீது தானே உரிமை கொண்டாட முடியாதபடி ஆணுக்கு மட்டும் உரிமை உடைய ஒரு பொருளாக சமுதாயம் பெண்ணை மதிப்பிட்டு வைத்துள்ளது. திருமணம், இல்லறம் என்ற மரபினால் வீடு எனும் கூட்டுக்குள் அடைத்து கணவன் தனது ஆதிக்க சக்தியினால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் வருத்துவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. திருமணத்திற்கு பின் பிள்ளைகளின் வாழ்க்கை கண்டு பெற்றோர்கள் எதிர்த்து பேச முடியாமல் தவிக்கும் நிலைகள் தான் இன்று ஏராளம்.கணவன் வீட்டில் மகள் கொடுமைக்கு ஆளாவதை கண்டும் கேட்டும்

எதிர்த்து போராட முடியாமல் தடுமாறுகிறார்கள். பெண்ணுரிமை, முன்னேற்றம், பெண்களுக்கு சம அந்தஸ்து என்றெல்லாம் மேடை போட்டு முழங்கும் ஆண்கள் தங்களது வீடுகளில் உள்ள பெண்களுக்கு முழு சுதந்திரமும் மதிப்பும் கொடுக்கிறார்களா என்றால் அது கேள்விக்குறியாக தான் இன்றும் நம் சமுதாயத்தில் இருக்கிறது. ஆதிக்க போக்குள்ள ஆண்களால் பெண்கள் அதிகமாக பிரச்சனைகளுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாவது குறித்து வ.உமாராணி அவர்கள் கூறும் போது,

> **பெண்களிடையே ஆடவர் துணை இன்றி வாழ இயலாது என்ற கருத்து நிலவுவதால் பெண்கள் ஆடவர்களால் பல துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். மக்களிடையே நிலவும் இவ்வண்ணத்தை அறிந்து கொண்டு தான் ஆடவர் சமுதாயம் பெண்களுடைய துணை வேண்டும் என்ற நிலை இருந்தும் காட்டிக்கொள்வதில்லை." (இசக்கிஅம்மாள், ஆ, முனைவர். ப. 31)**

பெண்மனச் சிக்கல்கள் என்னும் நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு காரணமாய் அமைவது அவள் தனக்கு நேரும் துன்பத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருப்பதாகும். சில பெண்கள் அனுபவிக்கும் ஒடுக்குதல்கள் வெளியில் சொல்ல முடியாத சோகங்களாக அவளுக்குள்ளையே அமிழ்ந்து போய் விடுகின்றன. ஆணின் ஆதிக்க சிந்தனைகளால் பல இன்னல்களுக்கு ஆளாகும் பெண்களில் சிலர் தங்களது வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.மேலும்,

> **தொழில் காரணமாக வீட்டை விட்டு வெளியில் செல்லும் கணவன் வீட்டுக்கு நுழையும் போது கணவனின் உடல் மற்றும் மனம் சார்ந்த தேவைகளை முன்வந்து நிறைவேற்றுவதே பெண்ணின் கடமையாக கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எதிர்ப்பார்ப்பு ஆதிகால சமுதாயத்திலிருந்து இன்று வரை நிலவி வருகிறது. (ஜான்சி பால்ராஜ், த, முனைவர், ப. 12)**

எந்நேரம் ஆனாலும் கணவனின் வருகைக்காக காத்திருந்து அவனிடம் எந்த கேள்வியும் கேட்கக்கூடாது என்று ஒரு சில ஆணாதிக்க சக்திகள் எதிர்பார்ப்பது அவமானத்துக்குரிய செயலாக காண முடிகிறது. கணவனின் தேவைகளை பூர்த்தி செய்வது தான் மனைவின் வேலை என்று இச்செயல்கள் மூலம் உணர முடிகிறது. இத்தகைய ஆணாதிக்க சிந்தனைகளை வென்று ஒரு சில பெண்கள் வெளியே வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

**அவமானப்படுத்தப்படும் நிலை**

குடும்பத்தில் கணவனின் தேவைகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு பணிவிடை செய்து, கணவன் போற்றும் படியாக வாழும் பெண் ஏதேனும் ஒரு கொடிய நோயின் தாக்குதலுக்கு ஆளாகும் பொழுது கணவனா டச்சு நவநவல் வெறுத்து ஒடுக்கப்பட்டு தீண்ட தகாதவளைப் போல் கருதப்படுகிறாள். இன்பம் துன்பம் எது வந்தாலும் இருவரும் சமமாக

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பங்கிட்டு கொள்வோம் என்று திருமணத்தின்போது கூறிய கணவன் இயலாமையில் இருக்கும் போது மனைவியை வெறுத்து ஒதுக்கி அவமானப்படுத்தும் நிலை இன்றும் சமுதாயத்தில் ஆங்காங்கே நடந்து கொண்டு தான் இருக்கிறது.

> **என்னதான் குடும்பம் என்னும் தத்துவம் மிக உயர்ந்த அர்த்தம் பொருந்திய புனிதமாக போற்றி பாதுகாக்க வேண்டிய அமைப்பாக இருந்தாலும், பெண்ணுக்கு அது நரகமாகிவிடுகிறது எனில் அதை உடைத்து நொறுக்கி வெளியேறுவது அந்தப் பெண்ணின் முதல் சுதந்திரமாகும் (கலைவாணி, நா, முனைவர். ப. 22).**

இக்கருத்திற்கு ஏற்ப ஒரு சில பெண்கள் வெளியேற முயற்சி செய்கிறார்கள்.ஆனால் ஒரு சில பெண்கள் முயற்சி செய்யும் போது கணவன் மனைவியிடம் சந்தேகம் கொண்டு தகாத வார்த்தைகளால் அவமானப்படுத்தும் போது மனதளவில் பாதிக்கப்பட்டு கூனிக் குறுகி யாரிடமும் பேசும் அளவிற்கு தைரியம் இல்லாமல் வீட்டுக்குள்ளே முடங்கி போகிறாள். பிற ஆண்களுடன் பேசுவதையும் தவறாக எண்ணி அவமானப்படுத்தி வீட்டு சிறைக்குள் கைதிபோல் வைத்திருக்கும் ஆண்களும் இக்கால சூழலில் உள்ளனர்.

அன்பு, கருணை, மனிதாபிமானம், ஒழுக்கம், நேர்மை, விட்டுக் கொடுத்தல், இயலாமையில் உதவுதல், போன்ற உயர்ந்த எண்ணங்கள் மறைந்து மனைவியும் ஒரு மனித உயிர் போன்றவள் என்று மதிக்கும் பண்பு குறைந்து வருகிறது. திருமணம் என்பது ஒரு பெண்ணின் முடிவான தீர்ப்பு அதை மாற்ற முடியாது. முரண்பாடுகளை கொண்ட கணவன் ஆனாலும் வாழ்ந்தே தீர வேண்டும் என்ற கட்டாயத்தில் பெண்கள் என்றும் ஒடுக்குதல்களுக்கும் அவமானத்திற்கும் அடிபணிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மனைவி தன் விருப்பப்படி நடக்க வேண்டும் என்பதோடு அல்லாமல் தன்னுடைய ரசனைக்கு ஏற்றவளாக நடந்து கொள்ள வேண்டும். அழகு, பண்பு ,உடல் தோற்றம், மனநிலை இவைகளில் எல்லாம் தனக்கு ஒத்துப் போக வேண்டும் என்று விரும்புகிறான். அவ்வாறு இல்லை என்றால் அவமானத்திற்குள் தள்ளப்படுகிறாள். அவமானம் அடையும் பெண்கள் சமையலறையில் முடங்கி போகிறார்கள். கணவன் பணக்கார குடும்பத்தை சேர்ந்தவனாக இருந்து அவனுக்கு மனைவியாக அமையும் பெண் ஏழை குடும்பத்தை சேர்ந்தவளாக இருந்தாலும் கணவனால் அவமானத்துக்குள் உள்ளாக்கப்படுகிறாள். தன்னுடைய உயர்ந்த நிலையைக் கூறி மனைவியை அடுத்தவர்கள் முன் தாழ்வாக அவமானப்படுத்தி பேசும் சூழலும் ஆங்காங்கே நடந்து கொண்டு தான் இருக்கிறது.

### கணவரின் பொறுப்பின்மையும் குடிப்பழக்கமும்

திருமணத்திற்கு பின் மனைவி குழந்தைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கணவனை சார்ந்ததாகும். இச்சூழலில் தனது பொறுப்பினை தட்டிக் கழிக்கும்போது மனைவியானவள் மனசிக்கலுக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. பெரும்பாலும் குடும்பத்தின் மீது பொறுப்பும் அக்கறையும் எடுத்துக் கொள்ளாமல், இருப்பதற்கு காரணம்

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

கணவனின் குடிப்பழக்கமாகும். குடிப்பழக்கத்திலிருந்து கணவரால் மீள முடியாத சூழலில் மனைவி அப்பொறுப்பினை ஏற்று சிரமப்படும் சூழல் ஏற்படுகிறது. கணவனின் குடிப்பழக்கத்தினால் பொருளாதார சிக்கலும் ஏற்பட்டுவிடுகிறது. புகுந்த வீடு அல்லது பிறந்த வீடு ஆதரவு இருந்தால் மட்டுமே மனத்துணிவுடன் வாழ்க்கையை எதிர்கொள்ள முடியும். இச்சூழல் இல்லை என்றால் மனைவியும் வேலைக்கு செல்வதுதான் ஒரே வழி. இதனால் மனைவியானவள் வீட்டு வேலைகளையும் கவனித்து வெளியே வேலைக்கும் சென்று தனது குடும்பத்தை பாதுகாக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறாள். மனைவி எவ்வளவுதான் சிரமப்பட்டு சிக்கனமாக பொறுப்பாக இருந்தாலும் கணவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி உழைப்பற்றவனாக இருந்தால் வாழ்க்கையில் ஒரு தடுமாற்றம் ஏற்படத்தான் செய்யும் என்பது அன்றாட வாழ்வின் மூலம் உணர முடியும்.

**கணவனின் பாலியல் பிறழ்வு**

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற தொன்மை பழமொழிகளை தற்கால பெண்கள் மதித்து கணவனின் நிலை குறித்து மனதிற்குள் எண்ணி மன நோயாளியாக மாறும் நிலை காணப்படுகிறது. எந்த மனைவியும் தன் கணவன் திருமணத்துக்கு பின் நெறிபிறழ்ந்து பிற பெண்களுடன் உறவாடுவதை ஏற்றுக் கொள்வதில்லை. கணவனின் நெறிபிறழ்ந்த வாழ்வை பிறர் கூறும் போது, மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகிறாள். இதனால் பிரிந்து வாழும் நிலையும் நேரிடுகிறது. மனைவியும் தன்னை போன்ற ஒரு உயிர் என்ற எண்ணம் கணவனிடம் இல்லாதவரை பெண் மனைவி என்ற நிலையில் அடிமையாக தான் இருந்து கொண்டிருக்கிறாள்.

> **சேறு கண்டவிடம் மிதித்து நீருகண்டவிடம் கழுவி வருவான் ஆண் பிள்ளையவன் என்பன போன்ற சொல்லாடல்கள் கற்பு ஆணுக்கு உரியதல்ல என்று உணர்த்தவே ஏற்படுத்தப்பட்டன (ஜான்சி பால்ராஜ், த, முனைவர். ப. 15)**

பெண் மட்டும் உடலையும் மனதையும் பிற ஆண்களிடம் இருந்து காத்துக் கொள்ள வேண்டும் என்று ஆடவர் விரும்புகின்றனர், தன் கணவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புவதை ஆண்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கணவரின் பெண் பித்து பிறத் தீயப்பழக்கங்களை காட்டிலும் பெண்ணுக்கு மிகுந்த அவமானத்தை தருகிறது. இதனை சிலப்பதிகாரத்திலும் கண்ணகி கோவலனிடம் **போற்றா ஒழுக்கம் புரிந்தீர் (முருகேசன், மு, ப: 78)** என்று குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது. கணவனின் பாலியல் பிறழ்வு மனைவியின் தன்மானத்தை பாதிக்கிறது. தன் பெண்மை மதிக்கப்படாவிட்டாலும் மிதிப்படாமல் இருந்தால் போதும் என்ற எண்ணமே இன்றைய காலங்களில் பெண்களின் ஆதங்கமாக உள்ளது.

**மனைவியின் ஆளுமை**

குடும்ப அமைப்பில் கணவனின் தனித்தன்மை மனைவியால் போற்றப்படுவது போல் மனைவியின் ஆளுமைத் திறன் கணவனால் சில இடங்களில் போற்றப்படுவதில்லை. **ஆணும்**

**பெண்ணும் நிகர் எனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்கும் (கலைவாணி, நா, முனைவர். ப. 58)** இக்கருத்து ஆண்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என அன்றாட செயல்கள் மூலம் அறிய முடிகிறது.சமுதாயத்திலும் குடும்பத்திலும் பெண்களின் ஆளுமையை ஏற்றுக் கொள்வது என்பது மிக மிக அரிதாக உள்ளது .கணவனின் ஆளுமையோடு மனைவியின் ஆளுமையை இணைத்து பேசாமல் மனைவியை மட்டம் தட்டி பேசும் கணவன்மார்களும் இச்சமுதாயத்தில் ஏராளம். மனைவியின் அழகு புத்திசாலித்தனம், சுறுசுறுப்பு கலைத்திறன்கள் போன்றவற்றை போற்றத் தெரியாத கணவனால் மனைவிக்கு மனச்சிக்கல் ஏற்படுவது கணவனின் அறியாமையின் உச்சகட்டம் ஆகும். அவளது கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும், மனைவியிடம் கேட்காமல் ஒரு காரியத்தை முடிவெடுத்து விட்டு தகவலை மட்டும் கூறுவதால் அங்கு மனைவியின் கருத்துக்கு இடம் இல்லாமல் போகிறது. உணவுக்கும், படுக்கைக்கும் மட்டுமே மனைவியை பயன்படுத்திவிட்டு அவளது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத கணவனால் மனைவி உள நோய்க்கு ஆளாகிறாள்.

**மனைவியை பிறந்த வீட்டிற்கு செல்ல விடாமை**

ஒரு பெண் திருமணமான பின்னர் தன் பிறந்த வீட்டிற்கு அடிக்கடி போகவோ, பெற்றோருக்கு உதவிடவோ கூடாது என்று கணவனோ கணவன் விட்டாரோ தடை செய்யும் நிலை இன்றும் காணப்படுகிறது. கணவர் வீட்டார் கூறினாலும் கணவன் மனைவிக்கு ஆதரவாக பேசி மனைவிக்காக தன் தாய் தந்தையிடம் பேசுவது இயலாத ஒன்றாக இருக்கிறது. பெண் என்பவள் திருமணமானவுடன் மடியில் வைத்த பொருளை உதறுவது போல் பிறந்த வீட்டு உறவுகளையும், நட்புகளையும் உதறிவிட்டு வந்துவிட வேண்டும். என்று புகுந்த வீட்டார் நினைப்பது மிக கொடுமையான செயலாகும். ஒரு செடியை பிடுங்கி இன்னொரு இடத்தில் நடுவதானால் கூட அது முளைத்த இடத்தில் வேரடி மண்ணோடு தான் எடுத்துச் சென்று புது இடத்தில் நடுவது வழக்கம். வேரடி மண்ணை உதறி விட்டு நட்டால் சரியாக வேர் பிடிக்காது. செடிக்கு அப்படி என்றால் உணர்வுபூர்வமாக 20 ஆண்டுகளோ அல்லது அதற்கு மேல் பிறந்த வீட்டில் வாழ்ந்த பெண் எவ்வளவு அன்பையும் பாசத்தையும் வேரடி மண்ணாக கொண்டிருப்பாள் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. எனவே, பிறந்துவீட்டு உறவுகளை நியாயமான அளவு மதிக்க வேண்டிய கடமை கணவனுக்கும் அவனை சேர்ந்தவர்களுக்கும் உண்டு. இது கணவனும் அவனது வீட்டாரும் தவறும் போது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்படும் சிக்கல் இருவரும் பிரிந்து வாழும் நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

**குழந்தையின்மை**

கணவனின் ஒடுக்குதலுக்கு மிக முக்கிய காரணமாக ஒரு பெண்ணுக்கு அமைவது குழந்தை பேறின்மை ஆகும். கணவனிடம் குறைபாடு இருந்தாலும் மலடி என்ற சொல் மனைவியின் மீது தான் சுமத்தப்படுகிறது.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

**காலம் கடந்த திருமணத்தாலும், ஏதேனும் கருப்பையில் குறைபாடுகள் இருந்தாலும் ஊட்டச்சத்து குறைவாலும் இந்நிலை ஏற்பட வாய்ப்புகள் உண்டு (பரிமளா, சா. ப.51).**

கணவன் மனைவி இருவருக்கும் இது உண்டு. இதனை புரிந்து கொள்ளாத ஆயிரம் பஞ்சஆண்மையற்ற தன்மையை மூடி மறைக்க மனைவி மேல் குற்றங்களை சுமத்தி அவளை ஒடுக்குதலுக்கு உள்ளாக்குவதோடு தங்களை நல்லவர்களாக காட்டிக்கொள்கின்றனர். தனக்கு குழந்தை பேறின்மைக்கு கணவன் தான் காரணம் என்று தெரிய வந்தாலும் பல பெண்கள் குறிப்பாக படித்த பெண்கள் கூட அதை வெளிக்காட்டுவதில்லை. இந்த மனதிலே ஆண்களிடம் ஏற்படாமல் இருப்பது வேதனைக்குரிய செயலாக இருக்கிறது .திருமணமாகி ஒரு சில வருடங்களிலே குழந்தை பிறக்கவில்லை என்றால் பெண்ணிடம் மட்டுமே குறை உள்ளதாக சுட்டிக்காட்டி பெண்ணை குறை கூறும் வழக்கம் தொன்றுதொட்டு இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால் வருடங்கள் செல்ல செல்ல கணவரின் எண்ணங்களில் மாற்றம் ஏற்படும் போது அவனது வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் கண்டு மன வேதனைக்குள் ளாகிறாள். இதனால் இருவரும் பிரிந்து வாழும் நிலைகளும் பெரும்பாலும் அதிக இடங்களில் காணப்படுவதை பார்க்க முடிகிறது.

**வரதட்சணைக் கொடுமை**

பெண்ணுக்கு சமூகம் இழைக்கும் கொடுமைகளில் தலையானது வரதட்சணைக் கொடுமையாகும். வரதட்சணைக் கொடுமை பெரும்பாலான குடும்பங்களில் புரையோடிப் போயிருக்கும் ஒரு நோயாகும். பெற்றோரால் வரதட்சணைத்தொகை முழுவதுமாக கொடுக்க முடியாது சூழலில் பெண் புகுந்து வீட்டாரால் ஒடுக்கப்பட்டு வாழாவெட்டி என்ற பட்டத்துடன் துன்பங்களை சுமக்கிறாள் வரதட்சிணைக் கொடுமையால் "மணப்பெண் தற்கொலை" என்று நாளிதழ்களில் செய்திகள் வருகின்றன. படிக்காத பெண்கள் என்று இல்லாமல் படித்த பெண்களில் பலரும் இக்கொடுமைக்கு உள்ளாகின்றனர். இது சமூகப் பிரச்சினைகளில் ஒன்றாகும் எனினும் கணவனின் குடும்பத்தார் பெண்ணை வார்த்தைகளால் காயப்படுத்தினாலும் அதற்கு ஆதரவாக கணவரும் இல்லாதபோது மனைவியானவள் ஏமாற்றம் அடைகிறாள்.

கணவரின் பொன் பண ஆசையினால் தன்னுடைய வாழ்க்கையை இழந்து நிற்கும் பெண்களே மிக அதிகம். மனைவியின் சீர்வரிசையில் நிறைவு பெறாத கணவனின் மனநிலையைக் கண்டு பெரும்பாலான பெண்கள் தற்கொலை என்ற முடிவினை எடுப்பது மிகவும் வேதனைக்குரிய செயலாகும் .இச்செயல் சமுதாயத்திற்கு இழுக்கான ஒன்றாகும் .இந்நிலை மாறா பெண்கள் விழிப்புணர்வு பெற்று அடுத்த தலைமுறை இப் பிரச்சினைக்கு அடிமையாகாமல் இருக்க தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்தே பெண்களின் மதிப்பினையும் மாண்பினை ஊட்டி வளர்க்க வேண்டும். இதன் மூலம் அடுத்த தலைமுறையாவது இதிலிருந்து விடுபட முடியும் என்பது திண்ணமான முடிவாகும்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

**முடிவுரை**

பெண் ஒடுக்குதல் எங்கே துவங்கியது என்று ஆராய்ந்து பார்த்தால் தமிழர்களின் வாழ்வின் ஆதாரமாக இருக்கும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்க்குரியன" என்று குறிப்பிடுகிறது. இதனை தவறாக புரிந்து கொண்டுள்ள ஆணாதிக்க சமுதாயம் அச்சம், நாணம், மடம்,பயிர்ப்பு ஆகியவை ஒரு நல்ல பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களாக பார்க்காமல், கணவன் என்பவன் மனைவியை தன் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி ஒடுக்கி அவளது திறமைகளுக்கு மதிப்பளிக்காமல் வைத்திருப்பது இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] இசக்கிஅம்மாள், ஆ, முனைவர். *பெண் மனச் சிக்கல்கள்.* காவ்யா பதிப்பகம், 2009.
[2] கலைவாணி, நா, முனைவர். *தமிழ்ப் புதினங்களில் தமிழ் ஒடுக்குதலும் பிரச்சனைகளும்.* காவ்யா பதிப்பகம், 2013.
[3] கௌமாரீஸ்வரி, எஸ். *திருக்குறள் பரிமேலழகர் உரை*, சாரதா பதிப்பகம், 2002.
[4] சுகிர்தா பஸ்மத், ச, முனைவர். *பெண்கள் நேற்று இன்று நாளை.* சரஸ் பதிப்பகம், 2006.
[5] பரிமளா, சா. *மகளிரின் பன்முக நோக்கு.* தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 2009
[6] பிரேமா, இரா, முனைவர். *பெண்ணியம்.* தமிழ்ப் புத்தகாலயம் பதிப்பகம், 2000.
[7] புலியூர் கேசி. *குறுந்தொகை மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், 2010.
[8] முருகேசன், மு, முனைவர். *மாறிவரும் சமுதாயத்தில் மனிதன்.* கங்கா ராணி பதிப்பகம், 2006.
[9] ஜான்சி பால்ராஜ், த, முனைவர். *தேவதாசி முறை ஒழிப்பியல்.* எமிகார் மைக்கேல், 2024.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.